

சிவகங்கை சண்முகராஜா கலையரங்கில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ. சிறப்புரையாற்றினார் . மேடையில் வேட்பாளர் நடிகர் கருணாஸ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சங்கை ச.கணேசனை ஆதரித்து சங்கரன்கோவில் பயணியர் விடுதி அருகில் கழக துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் தொகுதி பார்வையாளர் தங்கவேலு, தென்காசி மரு.ராணி ஸ்ரீ குமார் எம்.பி.முன்னாள் எம்.எல்.ஏ. முத்துச்செல்வி, நகர செயலாளர் பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## எல்லாவற்றிலும் இணக்கம் என்றால் எப்படி?

# தமிழ்நாட்டுக்குத் தொடர் துரோகம் இழைக்கும் எடப்பாடி பழனிசாமி - பா.ஜ.க. கூட்டணி!

## திருநெல்வேலி – நாங்குநேரி தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**திருநெல்வேலி, ஏப்.15 -**

**தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, திருநெல்வேலி தி.மு.க. வேட்பாளர் சுப்பிரமணியன், நாங்குநேரி காங்கிரஸ் வேட்பாளர் ரூபி மனோகரன் ஆகியோருக்காக ஏப்ரல் 13-ஆம் தேதியன்று தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார். அப்போது அவர் 'தமிழ்நாட்டுக்கு தொடர் துரோகம் இழைக்கும் எடப்பாடி பழனிசாமியின் பா.ஜ.க. கூட்டணி' என்று குறிப்பிட்டார்.**

கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசியதாவது:-

"நாம் நம்முடைய முதலமைச்சர், அவர்களுடைய பெயரால் வாக்கு கேட்கும் பொழுது மக்களுக்கு தந்திருக்க கூடிய வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி தந்திருக்கிறோம் என்ற அந்த பெருமையோடு, அந்த மகிழ்ச்சியோடு அந்த உரிமையோடு உங்களிடம் ஒட்டு கேட்கிறோம்.

### மகளிர் உரிமைத்தொகை!

இங்கே இருக்கக்கூடிய சகோதரிகள் எல்லாம் இந்த நிகழ்வுகளில் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டு இருக்கிறார்கள் என்றால், அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்த வாக்குறுதி மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் என்ற அந்த வாக்குறுதியை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள் என்ற அந்த மகிழ்வோடு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

வரக்கூடிய திராவிட மாடல் இரண்டாவது கட்ட ஆட்சியிலே அந்த ஆயிரம் ரூபாய் என்பது இரண்டாயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற அந்த நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறது. அந்த உறுதி உறுதியோடு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறீர்கள்.

### மகளிர்க்கு 8 ஆயிரம் ரூபாய்க்கான கூப்பன்!

அடுத்து எட்டாயிரம் ரூபாய்க்கான கூப்பன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எட்டாயிரம் ரூபாய்க்கான கூப்பனை வழங்குகிறேன் என்று சொல்லியிருக்கிறார். கடைக்கு போய் உங்களுக்கு என்ன வேணுமோ நீங்க வாங்கிக்கோங்க. நாங்க இதை வாங்கி தர்றோம். அதை வாங்கித் தறோம்னு சொல்லல. உங்க வீட்டுக்கு பக்கத்துல இருக்கக்கூடிய கடையில போய் உங்களுக்கு எது தேவையோ அதை நீங்கள் வாங்கி பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எட்டாயிரம் ரூபாய்க்கான கூப்பனை கொடுத்திருக்கிறார்.

இன்னும் ஒரு மாதத்தில் ஆட்சிக்கு வந்தவுடனே அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள். இப்படி மக்களுக்கு தந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி மக்களுக்கு தந்த அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றி தந்தார்கள்? வண்ணத் தொலைக்காட்சி பெட்டி தரேன்னு சொன்னாங்க. தந்தாங்க. விவசாயிகளுக்கு கட்டணமில்லாத மின்சாரம். இலவச மின்சாரத்தை தந்து விவசாயத்தை காப்பாற்றி விவசாயிகளை காப்பாற்றிய தலைவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இன்று நம்முடைய முதலமைச்சர் அவருடைய வழியில், இது இருபது லட்சம் விவசாயிகளுக்கு மேல் பயன்படக்கூடிய வகையில் மின்மோட்டார்கள், புதிய மின்மோட்டார்கள் விவசாயிகளுக்கு கட்டணம் இல்லாமல் வழங்கப்படும். இப்படி விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு என்று தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

ஆனால் நமக்கு எதிராக நிற்கக்கூடிய அ.தி.மு.க. யாரோடு கைகோர்த்துக்கொண்டு நிக்குது? பி.ஜே.பி.யோடு! 100 நாள் வேலைத் திட்டத்தில் யாருக்கும் சம்பளமும் ஏறுறதில்ல. நூறு நாள் வேலையும் இல்லை இல்லையா? மோடி ஆட்சிக்கு வந்தபிறகு அதுக்கு கொடுக்குற நிதியை குறைச்சிக்கிட்டே வராங்க. நிதிய கொடுக்கறது இல்ல. அந்த திட்டத்தையும் நிறுத்திடணும் அப்படின்னுதான் நினைக்கக்கூடியவர்கள் தான் பிஜேபியில் இருக்காங்க. அவங்க கூட தான் இன்னைக்கு கூட்டணி வைத்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

### இந்தி படிச்சுட்டு என்ன பண்றது?

இப்படி தமிழ்நாட்டு மக்களுக்கு சாதாரண சாமானிய மக்களுக்கு எதிராகவே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு ஆட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பி.ஜே.பி. அவுங்களோட தான் இணக்கமா இருக்கணும். இணக்கமா இருந்தா தான் திட்டங்களை கொண்டுவர முடியும் அப்படீன்னு எடப்பாடி சொல்றாரு. எல்லாத்துக்கும் இணக்கமா இருந்தா எப்படி? நமக்குன்னு உரிமை இல்லையா? அவங்க ஹிந்தி படி ஹிந்தி படிக்கலைனா புள்ளைங்க படிக்க காசு கொடுக்க மாட்டேங்குறாங்க. ஹிந்தி படிச்சிட்டு என்ன பண்றது?

அங்க இருந்து தான் இங்க வேலைக்கு வராங்க. அவங்க தமிழ் படிச்சுட்டு வர்றது இல்ல. நம்ம வேலைக்கு போகும் பொழுது நம்ம புள்ளைங்க வேலைக்கு போகும் போது பல நாடுகளுக்கு வேலைக்கு செல்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எல்லாரும் படிக்கணும். நம்ம வீட்டுல இருக்கக்கூடிய பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பதற்காகத்தான். கல்லூரியில படிக்கக் கூடிய பிள்ளைங்களுக்காக மாசம் ஆயிரம் ரூபாய் குடுக்குறாங்க இல்லையா? அடுத்த ஆட்சிக்கு வந்தவுடன் அதை ஆயிரத்தி ஐநூறு ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

### மக்களுக்கு கல்வி மிகவும் அவசியம்!

படிச்சிட்டு வேலை தேடக் கூட பிள்ளைங்களுக்கு. அடுத்து ஆட்சிக்கு வந்த உடனே வேலை தேடுறதுக்கு ஒரு நாலைஞ்சு மாசம் ஆகும். அவங்களுக்கு வேலை தேடுவதற்கான பயிற்சிகளை வழங்கி, அந்த பயிற்சி கொடுக்கக் கூடிய அந்த ஆறு மாசத்துல அவங்களுக்கு மாதம் ஆயிரத்தி ஐநூறு ரூபாய் தருகிறேன் என்று சொல்லக்கூடிய முதல்வர் நம்முடைய முதலமைச்சர்.



இந்த பகுதியில இருக்கக்கூடிய மக்களுக்கு கல்விங்கறது ரொம்ப முக்கியமான விஷயம். இதுல மிகப்பெரிய அளவுல நம்முடைய முதலமைச்சர் கொண்டுவந்த நான் முதல்வன் திட்டம். அந்த திட்டத்தின் வழியாக இங்க விக்ரமசிங்கபுரத்துல இருக்கக்கூடிய ஒரு மாணவன் சுப்பிரமணிய பாரதி. அவங்க அம்மா அவருக்கு ரொம்ப அழகான ஒரு பெயரை வைத்திருக்கிறார். அந்த இளைஞன். அவங்க அப்பா செங்கல் சூளையில வேலை செய்யக்கூடியவர். ரொம்ப கஷ்டப்படக் கூடிய குடும்பம்.

அரசுப் பள்ளியிலதான் அந்த பையன் படிச்சாரு. நம்ம முதல்வர் கொண்டு வந்த நான் முதல்வன் திட்டத்துல ஐ.ஏ.எஸ்,ஐபிஎஸ் தேர்வு எழுதுவதற்கு நம் அரசாங்கம் கொடுத்த பயிற்சிகளை எடுத்து, அடுத்த கட்ட பயிற்சிக்காக சென்னையில போய் இருந்து அங்க ஒவ்வொரு மாதமும் 7500 ரூபாய் தந்த முதலமைச்சர் நமது முதலமைச்சர். அந்த பையன் ஒரு பேட்டியில சொல்றாரு... 'எங்க அப்பாவுக்கு சம்பளமே 7500 ரூபாய் கெடையாது.ஆனால் எனக்கு பயிற்சிக்கே 7500 ரூபாய் தந்த முதல்வர்' என்று சொல்கிறார்.

இந்த பகுதியிலே செங்கல் சூளையில வேலை செய்யக் கூடிய ஒருவரின் மகன் சுப்பிரமணிய பாரதி இன்று ஐ.ஏ.எஸ்,. அதிகாரியாக வந்து... இந்த மாவட்டத்துக்கே கூட கலெக்டராகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது நம்ம ஆட்சி.

### துரோகக் கூட்டணி எடப்பாடி கூட்டணி!

ஆனா நம் பிள்ளைகள் படிக்கக் கூடாது... நீட் கொண்டுவந்து டாக்டர் ஆகக் கூடாது... புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து படிப்பதற்கு தடை போடும் ஆட்சிதான் ஒன்றிய ஆட்சி. அதோடு கூட்டணி வைத்திருப்பவர்தான் எடப்பாடி. அது தமிழ்நாட்டுக்கு தொடர் துரோகம் இழைக்கும் கூட்டணி, டெல்லியில் தமிழ்நாட்டை அடகு வைத்த கூட்டணி.

நான் தூத்துக்குடி எம்பியான போது பிரதான் மந்திரி கிராம சடக் யோஜனா என்ற திட்டத்தைப் பார்த்தேன். எனக்கு புரியல. என்னனு கேட்டபோது பிரதமர் கிராம சாலைகள் திட்டம்னு சொன்னாங்க. இது எப்படி கிராமத்தில் இருப்பவர்களுக்கு புரியும்? நாம எல்லாரும் இந்தி படிக்கணும் குறதை விட அவங்களுக்கு வேறு எந்த நோக்கமுமில்லை.

மக்களை மத ரீதியாக பிரிப்பதுதான் பிஜேபியின் வேலை. தொடர்ந்து இஸ்லாமிய மக்களுக்கு எதிரான சட்டங்களைக் கொண்டுவந்த பாஜகவுக்கு எடப்பாடி ஆதரவு அளித்தாரு. இப்ப வெளிநாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம்னு ஒரு சட்டத்தை கொண்டு வந்திருக்காங்க. இந்த நாடு முழுதும் பல பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர் காப்பகங்களை சிறுபான்மை நிறுவனங்கள் வெளிநாட்டு பணத்தை வாங்கி நடத்தி வருகின்றன.

அதுமட்டுமல்லாமல் மக்களுக்காக போராடும் எத்தனையோ என்.ஜி.ஒ.க்கள் வெளிநாட்டில் இருந்து பணம் பெற்று மக்களுக்கான பணிகளை செய்துகொண்டிருக்கின்றன. ஆனா பிஜேபி என்ன நினைக்குது? அந்த பணம் தன்னுடைய கட்சிக்கு தான் வரணும் என்று நினைத்து இந்த சட்டத்தைக் கொண்டுவருது. சிறுபான்மை மக்களை மிரட்டும் விதமாக, இந்த அரசை எதிர்த்து கேள்வி கேட்கும் நிறுவனங்களை மிரட்டும் விதமாக ஒடுக்கும் விதமாக ஒரு சட்டத்தை கொண்டு வருகிறார்கள்.

அந்த சட்டத்தை எதிர்ப்பது நம் முதலமைச்சர், காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள். ஆனால் இப்போது வரை அதை பற்றி எதுவும் சொல்லாமல் மௌனம் காப்பது அமித்ஷா திமுகவை நடத்திக் கொண்டிருக்கும் எடப்பாடி. சொன்னா வேற வருத்தப்படுவார்.

தலைவர் கலைஞர் காலத்தில் இருந்தே திமுகவினர் ஒரு வாக்குறுதி அளித்தால் அதை நிறை வேற்றியே தீருவோம். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை தந்து விவசாயத்தை விவசாயிகளை காப்பாற்றிய முதலமைச்சர் நம் தலைவர் கலைஞர். அவர் கொடுத்த கலர்டிவி இன்னைக்கும் நிறைய பேர் வீட்டில் பயன்பாட்டில் இருக்கு.

அவர் எப்படி இன்னும் தமிழ்நாட்டில் மக்கள் மனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாரோ, அவர் கொடுத்த தொலைக்காட்சிப் பெட்டி இன்னைக்கும் வீடுகளில் பயன்பாட்டில் இருக்கு. கலைஞர் கொடுத்த காஸ் ஸ்டவ், இரண்டு பர்னர் இருக்கக் கூடிய காஸ் ஸ்டவ் சீக்கிரம் சமையலை முடித்துட்டு பெண்கள் வெளியே வர வேண்டும்னு கொடுத்தாரு.

இப்படி மக்களுக்கு கொடுத்திருக்குக் கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றி தந்திருக்குக் கூடிய ஆட்சி நமது ஆட்சி.

ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகை தருகிறேன் என்று நம்ம முதலமைச்சர் சொன்னார்... அதை செய்ததார். விடியல் பயணம் என்று சொன்னார் . அதை செய்து தந்தார். இதுதான் மக்களுக்கான ஆட்சி.

### பண்பாட்டை பாதுகாக்கும் ஆட்சி நமது ஆட்சி!

மக்களுக்கு எதிரான அந்த கூட்டணிக்கு சரியான பாடத்தை நாம் சொல்லித் தர வேண்டும். மீண்டும் தமிழ்நாட்டில் இந்த மண்ணைப் பாதுகாக்கும் இந்த மக்களைப் பாதுகாக்கும் நம்முடைய மொழியை நம்முடைய பண்பாட்டைப் பாதுகாக்கும் ஆட்சி தொடர வேண்டும்.

நம்முடைய தமிழ் பெருமைகளை எல்லாம் சொல்லக்கூடிய பொருநை அருங்காட்சியகத்தை நம்முடைய முதலமைச்சர் நமக்காக உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இன்று நாடு முழுவதும் இருக்கக் கூடியவர்கள் வந்து தமிழ் பெருமைகளைப் பற்றித் தெரிந்து கொண்டு போகிறார்கள்.

அந்த பெருமைகளுக்குக் கூட எதிராக இருக்குக்கூடிய ஆட்சி ஒன்றியத்தில் இருக்குக்கூடிய ஆட்சி என்பதை நாம் புரிந்துகொண்டு இந்த தேர்தலிலே அவர்களுக்கு சரியான பாடத்தை சொல்லித்தர வேண்டும் .

அதனால் டெல்லியில் இருக்கும் பாஜக ஆட்சி, அதிமுக வழியாக தமிழ்நாட்டுக்கு வந்துவிடக் கூடாது என்பதில் இந்தத் தேர்தலில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் 77கோடி ரூபாய் மதிப்பீட்டில் மெகா உணவுப் பூங்கா அமைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் 4 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழிவக செய்து தரப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் அடுக்கு மாடி கட்டிடம், நவீன பார்க்கிங் வசதியுடன் 78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜங்ஷன் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

### திருநெல்வேலியில் செம்மொழிப் பூங்கா!

அடுத்து நமது ஆட்சி வந்தவுடன் திருநெல்வேலியில் செம்மொழிப் பூங்கா அமைக்கப்படும். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் புற்று நோய்க்கான நவீன மருத்துவசிகிச்சை ஏற்பாடு செய்து தரப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மின் பேருந்து இயக்கப்படும், மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் 10 ஆயிரம் பேருந்துகள் வாங்கப்படும். எல்லா பகுதிகளுக்கும் பேருந்து வசதி செய்து தரப்படும்.

மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து தமிழ் நிலத்தின் உரிமைகளை பாதுகாக்க உதய சூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். நாங்குநேரி காங்கிரஸ் வேட்பாளருக்கு கை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி தி.மு.க. சார்பில் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் ஆழ்வார்திருநகரி கிழக்கு ஒன்றியத்தில் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார் மக்கள் அமோகமாக வரவேற்றனர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஏ.பி.சதீஷ்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ் ஆர் எஸ் உமரிசங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், மற்றும் கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவன் தென்காசி தொகுதிக்கு உட்பட்ட மேலகரம் பேரூராட்சி பகுதியில் தெருத் தெருவாகச் சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார். நிகழ்ச்சியில் தென்காசி மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. பேரூர் செயலாளர் சுடலை பேரூராட்சி மன்ற தலைவர் வேணி வீரபாண்டியன்,துணைத் தலைவர் ஜீவானந்தம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்று வாக்கு சேகரித்தனர்.